*6*

# ஜீவனை உயிர்ப்பித்த ஒரு மனிதர்

## [2 இராஜாக்கள் 4:18–37; 8:1, 5]

நாம் எலிசா மற்றும் சூனேமியாளைப்பற்றிய கதையின் படிப்பை தொடர்கிறோம். நாம் கடந்த பாடத்தில், எலிசாவை ஒரு ஜீவனை *கொடுக்கிறவராக* பார்த்தோம் - பயனாளி ஒரு ஆண் மகனை தேவனிடமிருந்து பெறுவதற்கு அவர் காரணமாக இருந்தார். இந்த பாடத்தில், நாம் தீர்க்கதரிசியை ஜீவனை *உயிர்ப்பிக்கிறவராகப்* பார்ப்போம். இந்த சம்பவம் பிற்பாடு குறிப்பிடப்படுகையில், இந்த மொழிநடை வார்த்தை பயன்பாடு மீண்டும் மீண்டும் பயன்படுத்தப்பட்டுள்ளது:

> ... எலிசா தான் *உயிர்ப்பித்த* பிள்ளையின் தாயாகிய ஸ்திரீயை நோக்கி ... (2 இராஜாக்கள் 8:1; என்னால் வலியுறுத்தப்படுகிறது).

> “செத்துப்போனவனை உயிர்ப்பித்தார் என்பதை அவன் (கேயாசி) ராஜாவுக்கு அறிவிக்கிறபோது, இதோ, அவர் *உயிர்ப்பித்த* பிள்ளையின் தாயாகிய அந்த ஸ்திரீ வந்து, தன் வீட்டுக்காகவும், தன் வயலுக்காகவும் ராஜாவினிடத்தில் முறையிட்டாள்; அப்பொழுது கேயாசி: ராஜாவாகிய என் ஆண்டவனே, இவள்தான் அந்த ஸ்திரீ; எலிசா *உயிர்ப்பித்த* இவளுடைய குமாரன் இவன்தான்” என்றான் (2 இராஜாக்கள் 8:5; என்னால் வலியுறுத்தப்படுகிறது).

உண்மையில், தேவன்தான் உயிர்ப்பித்தார் என்பதை நாம் புரிந்து கொள்கிறோம். ஆனால் அவர் தம்முடைய உண்மையுள்ள ஊழியக்காரன் எலிசா மூலம் அதை செய்தார். இந்த பாடம் நிறைவடைவதற்கு முன்பாக, சூனேமியாளுக்கு உதவி செய்த அதே தேவனானவர், நமது வாழ்க்கையில் சோகம் வரும்போது நமக்கும் உதவி செய்ய வல்லவர் என்பதை நாம் வலியுறுத்தி கூறுவோம்.

### *மகிழ்ச்சி மற்றும் மன வேதனை (4:18-20)*

**மகிழ்ச்சி**

கடந்த பாடம் முடிகிறவேளையில், அந்த பெண் ஒரு புதிய குழந்தையை உடையவளாக இருந்தாள். குழந்தை பேசின முதல் வார்த்தைகள் மற்றும் எடுத்து வைத்த முதல் அடிகள் என குழந்தையின் புதிய அனுபவத்தை ரசித்து, அந்த தாய் மகிழ்ந்த நாட்களை நாம் கற்பனை செய்வது கடினமானதல்ல.

இந்த பாடம் துவங்குகையில், பல ஆண்டுகள் கடந்து போயிருந்தன. 2 இராஜாக்கள் 4:18, "அந்த பிள்ளை வளர்ந்தான், ஒரு நாள் அவன் அறுப்பறுக்கிறவர்களிடத்திலிருந்த தன் தகப்பனண்டைக்குப் போயிருந்தான்" என கூறுகிறது. அந்த பையன் அநேகமாக விடலை பருவத்தின் கடைசிக்கட்டத்தில் அல்லது இருபதுகளின் துவக்கத்தில் இருந்தான் என்ற ஒரு அபிப்பிராயத்தை நாம் பெறக்கூடும். இருப்பினும் அவன் தாயின் மடியில் வைத்துக்கொள்ளக் கூடிய மற்றும் மாடிக்கு தூக்கிச் செல்லக்கூடிய அளவுக்கு "சிறியவனாக" இருந்தான் என்பதை பின்னர் கவனிக்கிறோம் (வசனங்கள் 20, 21). அவன், வசனங்கள் 26, 34ல் "பிள்ளை" மற்றும் "சிறுவன்" (வசனங்கள் 29, 31, 33, 35) என அழைக்கப்படுகிறான். அவன் வயலுக்கு தன் தகப்பனிடம் ஓடிச் செல்லுமளவுக்கு - நான்கு முதல் ஆறு வயதுக்கு உட்பட்டவனாக இருந்திருக்கலாம்.

மூன்று கருத்துகள் சொல்லப்படவேண்டியவைகளாக உள்ளன. முதலாவது, அவன் வயலுக்கு தன் தந்தையிடம் செல்ல தாய் அனுமதி கொடுத்ததாக அந்த வசனப்பகுதி சொல்வதில்லை. நான் மூன்று வயதாயிருந்த போது, எனது புத்தகங்களை எடுத்துக் கொண்டு, எனது பெற்றோரின் வீட்டை விட்டு, எனது தந்தை ஆசிரியராக பணியாற்றின சிறு பள்ளிக்கூடத்திற்கு நடந்து சென்றுவிட்டேன். (அப்போதுதான் அவர் முதல் முறையாக பாடம் நடத்தும் பணியை பெற்றிருந்தார். அவர் மிகவும் சங்கடத்திற்கு உள்ளானார்.) நமது கதையில் வரும் இளம் சிறுவன், தன் தந்தை இருக்கும் இடத்தை தெரிந்து கொண்டு, வீட்டை விட்டு தன் தாய்க்கு தெரியாமல் அங்கு சென்றுவிட்டான். இரண்டாவதாக, பையன் தன் தாயின் அனுமதியோடு சென்றிருந்தாலும், ஒரு வேலைக்காரன் துணைக்கு கூடச் சென்றிருப்பான். ஒருவேளை, அவனை தூக்கிக் கொண்டு திரும்பிய (வசனங்கள் 19, 20) வேலைக்காரன் அவனைக் கொண்டுபோயிருக்கக்கூடும். மூன்றாவதாக, வழக்கத்தின்படி, கிராமத்து சிறுவர்கள் சிறு வயதிலேயே விவசாய வேலைகளில் ஈடுபட்டார்கள். அறுவடை தொடர்பான விஷயங்களை தன் மகன் நேரில் பார்த்து அறிந்து கொள்ளவேண்டுமென அவன் தந்தை விரும்பியிருக்கலாம்.

எப்படியிருப்பினும், அறுவடை பணியாளர்களிடத்திலிருந்த தன் தந்தையிடம் அவன் சென்றுவிட்டான் (வசனம் 18). அது அறுவடை காலம், அந்த ஆண்டின் மிக அலுவலான காலம், அங்கு நடந்தவைகளெல்லாம் அந்த சிறுவனுக்கு வியப்பூட்டுவதாக இருந்திருக்க வேண்டும். தானியக் குவியல்கள் நடுவில் அவன் அங்கும் இங்கும் ஓடித்திரிகிற காட்சியை நான் பார்க்கிறேன். தன் முதுமையில் பிறந்த அந்த மகனை பாசத்தோடு அவ்வப்போது அந்த தந்தை கவனித்துக் கொண்டார் என்பதில் சந்தேகம் இல்லை.

**மனவேதனை**

திடீரென, ஒரு பேரழிவு தாக்கியது. அந்த சிறுவன் தன் தலையை பிடித்துக் கொண்டு, "என் தலை நோகிறது, என் தலை நோகிறது" என கதறியிருக்க வேண்டும் (வசனம் 19அ). அந்த பையனின் வியாதியைப் பற்றி நமக்கு நிச்சயமாக தெரியவில்லை. அறுவடை பணியாளர்களின் கருவிகளால் தலை காயம் ஏற்படவில்லை என கூறலாம் - ஏனெனில் தந்தை வெளியில் தெரியக் கூடிய ஒரு காயத்தை குறித்து கரிசனையுள்ளவராக இருந்திருப்பார். பெரும்பாலான

*பழைய விரிவுரை நூல்கள் அவன் சூரிய உஷ்ணத்தால் மயக்கமடைந்தான் என யூகிக்கின்றனர் - அந்த வெயில் பகுதியில் அது சாத்தியமானதாக இருக்கிறது (காண்க சங்கீதம் 121:6; ஏசாயா 49:10). எப்படியிருப்பினும், "எஸ்டராயிலோன் சமவெளிப்பகுதியில் அறுவடை காலத்தில் சிறுவர்கள் சூரிய வெயிலால் மயக்கம் அடைவது அரிதான ஒரு சம்பவமாக இருக்கும்" என டொனால்ட் வைஸ்மேன் என்பவர் கூறுகிறார்.[1] இதற்கு மூளை வீக்கம் அல்லது மூளை கட்டி உள்ளிட்ட வேறு மருத்துவ விளக்கங்களும் இருக்கின்றன.[2] வியாதி எதுவாக இருந்தாலும் அன்பான தாயின் கவனிப்பால் குணமாக்க முடியாததாக அது இருக்கமுடியாது என தந்தை நினைத்தார். அவர் வேலையாட்களை மேற்பார்வை செய்வதற்காக வயலில் இருக்க வேண்டிய அவசியம் இருந்தது, ஆகவே அவர் வேலைக்காரனை நோக்கி, "இவனை இவன் தாயினிடத்தில் எடுத்துக்கொண்டுபோய்விடு" என்றான் (2 இராஜாக்கள் 4:19ஆ).*

*தன் மகன் வீட்டிற்கு தூக்கி வரப்பட்டது அந்த பெண்ணுக்கு எவ்வளவு பெரிய அதிர்ச்சியாக இருந்திருக்கும் (காண்க வசனம் 20அ). அந்த நாளின் காலையில் அவன் விளையாடுவதை அவள் ரசித்து பார்த்திருந்தாள்; அவள் அவனுடைய புன்னகை மற்றும் சிரிப்பின் சத்தத்தை கேட்டிருந்தாள். இப்போது அவன் வேலைக்காரன் கைகளில் முனகிக்கொண்டு படுத்துகிடக்கிறான். அந்த பையனை தன் கைகளில் ஏந்தி, தன் மடியில் கிடத்துகையில் பயம் அவள் இருதயத்தை கவ்வியிருக்க வேண்டும் (காண்க வசனம் 20ஆ). அவன், "அம்மா என் தலை வலிக்கிறது, என் தலை வலிக்கிறது, அதை தயவு செய்து நிறுத்துங்கள்!" என அவன் அழுதபோது அவள் கண்களில் கண்ணீர் வழிந்தது. அவள் முன்னும் பின்னுமாக அசைந்து, ஒரு தாயின் ஆறுதலிக்கும் தொனிகளை எழுப்புவதை என் மனதில் நான் பார்க்கிறேன். அவள் ஈரத்துணியால் அவன் நெற்றியை இதமாக துடைத்து, முத்தங்களால் அவன் கன்னத்தை இதமாக்குவதை நான் பார்க்கிறேன்: "இவன் மரிக்க மாட்டான். இவன் நிச்சயம் மரிக்கமாட்டான்! தேவன் எனக்கு இவனை கொடுத்தார்; நிச்சயமாக இவன் என்னிடத்திலிருந்து எடுத்துக்கொள்ளப்படமாட்டான்!"[3] என கூறும் அவள் எண்ணச் சிதறல்களை நான் கற்பனை செய்கிறேன்: "தேவனே என் மகனை மரிக்க அனுமதியாதேயும்! என் மகனை மரிக்க விடவேண்டாம்!" என பரத்தை நோக்கி எவ்வளவாய் அடிக்கடி அவள் ஜெபித்திருப்பாள்.*

*அவளுடைய அன்பு, அவளுடைய சிறந்த முயற்சிகள் மற்றும் அவனை பழைய நிலைக்கு கொண்டுவருவதற்கான அவளுடைய உள்ளம் உருகிய ஜெபங்கள் ஆகியவை இருந்தபோதிலும், அவன் மிகவும் பெலவீனமான வனாக மாறிவிட்டான். அவனுடைய அழுகுரல் மெல்லியதாக, மெல்லியதாக மாறி, இறுதியில் அது நின்று போய்விட்டது. அவன் இறுதியாக ஒரு பெருமூச்சு விட்டான் மற்றும் அவன் சிறிய உடல் சில்லிட்டுபோய்விட்டது. நம்முடைய வசனப்பகுதி சுருக்கமாக, "அவன் மத்தியானமட்டும் அவள் மடியில் இருந்து செத்துப்போனான்," என கூறுகிறது (வசனம் 20ஆ, இ). வேதாகம அற்புதங்களை விசுவாசியாதவர்கள் அந்த பையன் சுயநினைவு இழந்திருந்தான் என கூறுகிறார்கள், ஆனால் "[ஆவியானவரால் ஏவப்பட்ட] வரலாற்று ஆசிரியர் இதை விட அதிக தெளிவாக கூறியிருக்க முடியாது":[4] அவன் "செத்துக்கிடந்தான்" (வசனம் 32ஐயும் காண்க).*

*குழந்தைகள் - களங்கமற்ற குழந்தைகள் - மரிக்கக்கூடுமா? நாம் ஒவ்வொரு*

நாளும் இதை பார்க்கிறோம். அவர்கள் ஏன் மரிக்கிறார்கள்? ஏனெனில் நாம் பாவத்தால் பாதிக்கப்பட்ட உலகில் வாழ்கிறோம். நீண்ட காலத்திற்கு முன்பு, ஆதாம் மற்றும் ஏவாளிடம், அவர்கள் விலக்கப்பட்ட கனியை புசித்தால், "சாகவே சாவார்கள்" என சொல்லப்பட்டது (ஆதியாகமம் 2:17). அவர்களுடைய கீழ்ப்படியாமையை தொடர்ந்து, "மரணம் எல்லாருக்கும் வந்தது ..." (ரோமர் 5:12); இது உலகம் தழுவிய ஒரு நிலையாக மாறிவிட்டது. "ஒரே தரம் மரிப்பது மனுஷனுக்கு நியமிக்கப்பட்டிருக்கிறது" (எபிரெயர் 9:27). சிலர் முதிர் வயதில், சிலர் நடுவயதில் மற்றும் ஆம், சிலர் குழந்தை பருவத்திலும் மரிக்கிறார்கள். இப்படிப்பட்ட சோகங்கள், "... இனி மரணமும் இல்லை" என்ற பரலோக வீட்டிற்கான நம்முடைய வாஞ்சையை அதிகம் தூண்டுகிறது (வெளிப்படுத்தின விசேஷம் 21:4), அங்கே நாம் நமது கரங்களில் இருந்து எடுத்துக்கொள்ளப்பட்ட அருமையான சிறியவர்களோடு மீண்டும் இணைக்கப்படுவோம் (காண்க 2 சாமுவேல் 12:23).

## ஒரு திட்டம் மற்றும் ஒரு வேண்டுகோள்? (4:21-31)

**ஒரு திட்டம்?**

தன் மகன் மரித்துவிட்டான் என்பதை சூனேமியப் பெண் உணர்ந்து கொண்டபோது எப்படி நடந்து கொண்டாள்? அவள் கண்ணீரில் நிலை குலைந்துவிடுவாள் என நாம் எதிர்பார்த்திருப்போம். அவள் தன்னோடு அழும்படி தன் நண்பர்களை அழைப்பாள் என எதிர்பார்த்திருப்போம். அவள் அந்த சிறுவனின் உடலை அடக்கத்திற்கு ஆயத்தமாக்கும்படி வேலைக்காரருக்கு அறிவுரை வழங்கியிருப்பாள் என எதிர்பார்த்திருப்போம். அவள் அதற்குப் பதிலாக விந்தையான ஒன்றை செய்தாள்: "அப்பொழுது அவள் ஏறிப்போய், அவனை தேவனுடைய மனுஷன் கட்டிலின்மேல் வைத்து, அவன் வைக்கப்பட்ட அறையின் கதவைப் பூட்டிக்கொண்டுபோய்" (2 இராஜாக்கள் 4:21). அவள் துல்லியமாக எதற்காக அப்படிச் செய்தாள் என்பதை நான் அறிய விரும்புவேன்; அந்த தருணத்தில் அவள் நினைவுகள் என்னவாய் இருந்தன என்பதை துல் லியமாக அறிய விரும்புவேன். கீழ்வரும் கருத்துரைகள் அந்த சூழ்நிலையை விளக்கப்படுத்தலாம் அல்லது விளக்கப்படுத்தாமலும் போகலாம்:

(1) தீர்க்கதரிசியின் அறை அவளுடைய வீட்டிலிருந்த அறைகளில் யாரும் பிரவேசிக்கவியலாத அறையாக இருந்தது. அந்த பெண் பல மணி நேரங்கள் அங்கு இல்லாமல் இருக்கப்போகிறாள். எலிசாவின் அறையில் தன் மகனின் சரீரத்தை வைத்திருந்தால், அவள் வெளியில் சென்றிருக்கும்போது ஒருவரும் அதைத் தொந்தரவு செய்யமாட்டார்கள் என்பதில் அவள் நிச்சயமாயிருக்க முடியும். யூதர்கள் தங்களுடைய நடைமுறைப்படி மரித்தோரை அவர்கள் மரித்த அதே நாளில் அடக்கம் செய்தார்கள். அதற்கான ஆயத்தங்கள் செய்யப்படாமல் இருப்பதை அவன் தாய் விரும்பியிருக்கலாம்.

(2) தீர்க்கதரிசியின் அறை அந்த வீட்டின் மற்ற அறைகளைவிட பிரத்தி யேகமானவைகளில் ஒரு அறையாக இருந்தது என நாம் ஆலோசித்திருந்தோம் - ஆனால் அந்த பெண்ணின் படுக்கை அறை போன்ற பிரத்தியேகமான அறைகளும் இருந்திருக்கலாம். அந்த பெண் தன் மகனை *தீர்க்கதரிசியின்* அறையில் வைத்து விட்டு, அவரை சந்திக்க சென்றது, அவள் எலிசா ஏதாவது

ஒரு வகையில் இதில் இடைபடவேண்டுமென அவள் எதிர்பார்த்தாள் என்பதை சுட்டிக் காண்பிக்கிறது.

நாம் நமது பாடத்தை படிக்கையில் இந்த கருத்துக்களை மனதில் வைத்துக்கொள்ளுங்கள். அவள் தீர்க்கதரிசியின் அறையில் தனது மகனை வைத்த பிறகு, "தன் புருஷனிடத்தில் ஆள் அனுப்பினாள்" (வசனம் 22அ). அவள் தன் புருஷன் இருந்த வயலுக்கு சென்று, "நான் சீக்கிரமாய் தேவனுடைய மனுஷன் இருக்கும் இடமட்டும் போய்வரும்படிக்கு; வேலைக்காரரில் ஒருவனையும் ஒரு கழுதையையும் எனக்கு அனுப்ப வேண்டும்" என்றாள் (வசனம் 22ஆ). அவள் எலிசாவை, "தேவனுடைய மனுஷன்" என குறிப்பிட்டாள் (வசனம் 9).

அவள் ஏன் எலிசாவிடம் செல்ல விரும்பினாள் என வசனம் எதுவும் கூறுவதில்லை. அவள் தீர்க்கதரிசி இருந்த இடத்தை வந்து அடைந்தபிற்பாடு, தனது துக்கத்தை வெளிப்படுத்தினாள் (வசனம் 28), ஆனால் அவள் தன் மகனின் உடலை கைவிட்டுவிட்டு புகார் சொல்வதற்காக அந்த நீண்ட பிரயாணத்தை மேற்கொள்ளவில்லை. அவள் தன்னால் முடிந்த அளவு வேகமாக அந்த பிரயாணத்தை மேற்கொண்டது (வசனம் 24) மற்றும் எலிசா தன்னோடு அங்கு வரும்படி வேண்டிக்கொண்டது (வசனம் 30) தீர்க்கதரிசி தன் மகனின் உடல் அருகில் எவ்வளவு சீக்கிரமாய் வரமுடியுமோ அவ்வளவு சீக்கிரமாய் வந்து இருக்கும்படி அவள் விரும்பினாள் என்பதை காண்பிக்கிறது.

எலிசா தன் உணவு வேளைகளில் தன் எஜமானாகிய எலியாவைப் பற்றின கதைகளை கூறியிருப்பார் என முந்திய பாடத்தில் குறிப்பிட்டிருந்தோம். அப்படியானால், அந்த பிரமிப்பான சம்பவங்களில் எலியா சாரிபாத் ஊர் விதவையின் மகனை உயிர்ப்பித்த அந்த பிரமிப்பான சம்பவத்தையும் கூறியிருப்பார் (1 இராஜாக்கள் 17:17-24). வேதாகமத்தின் பதிவுகளை பொருத்தவரை, வேறு எவரும் இதற்கு முன் மரித்தோரை உயிர்ப்பித்த தில்லை, அதன்பின் உயிர்ப்பித்ததுமில்லை. சூனேமியாள் அந்த கதையை கேள்விப்பட்டிருந்தால், எலியாவின் மற்ற அற்புதங்களை எலிசா செய்ததுபோல, இதையும் அவர் செய்வார் என்ற நம்பிக்கை உடையவளாக இருந்தாள் (2 இராஜாக்கள் 2:14ஐ 2 இராஜாக்கள் 2:8 உடன் ஒப்பிடுக; 2 இராஜாக்கள் 4:1-7ஐ 1 இராஜாக்கள் 17:8-16உடன் ஒப்பிடுக). வைஸ்மேன் என்பவர், "அந்த பெண் தன் மகனை இழந்திருந்தாள் ஆனால் தன் விசுவாசத்தை இழக்கவில்லை"[5] என நம்பிக்கையோடு கூறுகிறார்.

அந்த பெண்ணின் நோக்கம் எதுவாக இருந்தபோதும், அவள் தீர்க்கதரிசியினிடத்தில் சென்று வருவதற்கு ஒரு வேலைக்காரர் மற்றும் ஒரு கழுதையை தன் புருஷனிடத்தில் கேட்டாள் (வசனம் 22ஆ). தீர்க்கதரிசி இருந்த இடத்திற்கு தன் மனைவி செல்ல விரும்பியதைப் பற்றி அவர் ஆச்சரியப்படவில்லை. அந்த நேரத்தைப் பற்றிதான் அவன் ஆச்சரியப்பட்டான். அப்பொழுது அவன், "இது அமாவாசியும் அல்ல ஓய்வுநாளும் அல்லவே; நீ இன்றைக்கு அவரிடத்துக்குப் போக வேண்டியது என்ன" என்று கேட்கச் சொன்னான் (வசனம் 23அ). ஓய்வுநாளும் அமாவாசியும் யூதருக்கு சமய நடவடிக்கைகளுக்கு உரிய நாட்களாக இருந்தன (காண்க யாத்திராகமம் 20:8-11; எண்ணாகமம் 29:6; நெகேமியா 10:32; சங்கீதம் 81:3). விக்கிரக ஆராதனை நிறைந்த அந்த பிராந்தியத்தின் விசுவாசமுள்ள மக்கள், அந்த நாட்களில் எலிசாவிடம் கூடிவந்தார்கள் என சொல்லப்பட்டது. எப்படியிருப்பினும், அந்த

*சிறப்புநாட்களில் ஒன்றாக இல்லாத இந்த நாளில் தன் மனைவி தீர்க்கதரிசியிடம் செல்ல விரும்பியதுதான் அந்த கணவருக்கு சற்று குழப்பமாக இருந்தது.*

*அந்த பெண் இந்த கேள்விக்கு பதில் அளிக்கவில்லை. அதற்கு அவள், "எல்லாம் சரிதான்" என்றாள் (2 இராஜாக்கள் 4:23ஆ). "எல்லாம் சரிதான்" என்ற அவளுடைய வார்த்தை, தன் மகன் உயிர்ப்பிக்கப்படுவான் என்பதில் அவளுக்கு சந்தேகம் இருக்கவில்லை என்பதற்கு ஆதாரமாயிருக்கிறது என சிலர் கருதுகின்றனர். ஆனால் அவள் எலிசாவிடம் பேசிய முதல் வார்த்தை அப்படிப்பட்ட நம்பிக்கையை பிரதிபலிக்கவில்லை (வசனம் 28). தன் மகன் தேவனோடு இருந்தபடியால், எல்லாம் சரியாயிருக்கிறது என்ற பொருளில் அவள் பேசினாள் என மற்றவர்கள் நம்புகிறார்கள். ஒரு சிறிய குழந்தை மரிக்கும் போது, அவன் ஆத்துமா கர்த்தரோடிருக்கும்படி போகிறது என்பது உண்மைதான் (2 சாமுவேல் 12:23) - மற்றும் துயருறும் எந்த பெற்றோர்க்கும் இது மிக பெரிய ஆறுதலாக இருக்கிறது. எப்படியிருப்பினும் சூனேமியாள் எலிசாவிடம் பேசின மற்ற வார்த்தைகள் (2 இராஜாக்கள் 4:28) இது அவள் மனதிலிருந்தது என அபிப்பிராயத்தை ஏற்படுத்துவதில்லை.*

*எபிரேய மொழியில், அந்த பெண் தன் புருஷனுக்கு ஒரு வார்த்தையில் பதிலளித்தாள்: ஷாலோம்.[6] ஷாலோம் என்பது அடிப்படையில் "சமாதானம்" என பொருள்படுகிறது.[7] "இது சில சமயங்களில், ஒருவருக்கு நிச்சயமான பதில் அளிப்பதை தவிர்ப்பதற்கு, அதே சமயத்தில், அவருக்கு திருப்திகரமான ஒரு பதிலை கொடுப்பதற்கு பயன்படுத்தப்படுகிறது."[8] நான் வாழும் பகுதியில், இதே விதத்தில் சில முழுமையான பொருள் தராத வார்த்தைகள் பயன்படுத்தப்படுகின்றன. அவைகளில் சில, "அதை பொருட்படுத்தாதே" அல்லது "அதை பற்றி கவலைப்படாதே." ஆஸ்திரேலியர்கள், "அவள் சரியாகி விடுவாள், துணைவா!" ("அது சரியாகிவிடும்; நண்பா" என பொருள்படும்) என்ற சொற்றொடரை பயன்படுத்துகிறார்கள். உலகம் முழுவதிலும் மக்கள் இப்படிப்பட்ட வார்த்தை உபயோகங்களை கொண்டிருக்கிறார்கள்.*

*கணவர் மேலாதிகமாக ஏன் இது பற்றி விசாரிக்கவில்லை என சிலர் வியப்படைகிறார்கள். அவசரமான அறுவடை பணியால் அவருடைய கவனம் சிதறிப்போயிருக்கலாம். மேலும் அவர் தன் மகனைப் பற்றி எதுவும் கேட்கவில்லை என ஆச்சரியப்படுகிறார்கள். தன் மகனுக்கு எதுவும் பிரச்சனை இருந்தால், அவள் வீட்டைவிட்டு போகமாட்டாள் என அவன் அநேகமாக யூகித்திருப்பான்.[9] அவளுடைய வார்த்தைகளில் திருப்தியடைந்த அவன், அவள் வேண்டுகோளுக்கு சம்மதித்தான். வேலைக்காரன் மற்றும் கழுதையின் சேவை அறுவடை பணிக்கு தேவையாயிருந்தது ஆனால் ஒரு அரை நாளளவும் அவைகள் இல்லாமல் அவனால் சமாளிக்கக்கூடும்.*

*கழுதையின் மேல் சேணம் வைத்து ஏறி, தன் வேலைக்காரனை நோக்கி: "இதை ஓட்டிக்கொண்டுபோ; நான் உனக்குச் சொன்னால் ஒழிய போகிற வழியில் எங்கும் ஓட்டத்தை நிறுத்தாதே" என்றாள் (வசனம் 24). "ஓட்டு" என்பதின் பொருள். "இந்த கழுதையை எவ்வளவு வேகமாய் முடியுமோ; அவ்வளவு வேகமாய் ஓட்டிக்கொண்டுபோ என்பதாகும்." அவள் போக வேண்டிய இடம் கர்மேல் பர்வதமாகும் (வசனம் 25அ). அவளுக்கு முன்பாக ஒரு பதினைந்து முதல் இருபது மைல் தொலைவு பயணம் இருந்தது. எவ்வளவு சீக்கிரமாய் தீர்க்கதரிசியினிடம் செல்ல முடியுமோ அவ்வளவு சீக்கிரமாய் செல்ல*

*விரும்பினாள். எலிசா கர்மேல் பர்வதத்தில் இருந்தார் என்பது அவளுக்கு எப்படி தெரிந்தது என நமக்கு தெரியவில்லை. ஒருவேளை, அவர் கடந்த முறை இந்த பரிச்சயமான ஓய்வு எடுக்கும் இடத்திற்கு வரும்வழியில் அவளுடைய வீட்டில் தங்கி சென்றிருக்கலாம்.*

*பல மணி நேர பயணத்திற்கு பிறகு, அவள் கர்மேல் பர்வதத்தை அடைந்தாள் (வசனம் 25அ). எலிசா தொலைவிலிருந்து அவளை பார்த்தான் (வசனம் 25ஆ). ஏதோ பிரச்சனை நடந்திருக்கிறது என்பதை எலிசாவால் உணர முடிந்தது. அவளுடைய விலங்கு ஓட்டிக்கொண்டு வரப்பட்டவிதம், அவ்வளவு வசதி யானவள் அதில் ஏறிவந்த விதம் ஏதோ பிரச்சனை என்பதை உணர்த்தியது. நாம் ஒருவரை கலக்கமுற்றவராக காணும்போது, அவருக்கு அல்லது அவளுக்கு ஏதோ துயரம் நிகழ்ந்திருக்கிறது என்பது தான் நம் மனதில் வரக்கூடிய முதல் எண்ண மாக இருக்கிறது. இப்படித்தான் எலிசா யூகித்தான். தன் வேலைக்காரனாகிய கேயாசியை பார்த்து: "அதோ சூனேமியாள் வருகிறாள், நீ அவளுக்கு எதிர் கொண்டு ஓடி, நீ சுகமாயிருக்கிறாயா? உன் புருஷன் சுகமாயிருக்கிறானா? அந்த பிள்ளை சுகமாயிருக்கிறதா? என்று அவளிடத்தில் கேள் என்றான்" (வசனங்கள் 25இ, 26அ).*

*கேயாசி ஓடிப்போய் அவளை சந்தித்து, எலிசா தன்னிடம் கேட்கும்படி கூறிய கேள்விகளை கேட்டபோது, அவள் "சுகந்தான்," என்றாள் (வசனம் 26ஆ). மறுபடியுமாக, மூல வசனத்தில் அவள், "ஷாலோம்,"[10] என்றாள். மறுபடியுமாக அவள் பதில் தெளிவற்றதாகவே இருந்தது. உலகில் நான் வாழும் பகுதியில், ஒருவர் மற்றொருவரிடம் அவர் எப்படி இருக்கிறார் என வினவினால், "பரவா யில்லை" என்பதே ஒரு பொதுவான பதிலாக இருக்கும். இது "நான் சுமாராக இருக்கிறேன்" என்பதிலிருந்து, "நான் அவ்வளவு சுமாராக சரியாக இல்லை, ஆனால் நான் அதைப் பற்றி பேச விரும்பவில்லை" என்பது வரை எந்த அர்த்தத்தை வேண்டுமானாலும் கொடுக்கும். கடைசியாக சொல்லப்பட்டிருப்பது அந்த பெண்ணின் தற்போதைய உணர்வுகளை பிரதிபலிப்பதாக இருக்கும். அவள் தன் போராட்டங்களை தீர்க்கதரிசியை தவிர பிறரிடம் கூற விரும்பவில்லை.*

**ஒரு வேண்டுகோள்?**

*அவள் மலை அடிவாரம் வந்து சேர்ந்த போது, எலிசா இருந்த இடம் மட்டும் ஏறிச்சென்றாள். துக்கத்தால் மேற்கொள்ளப்பட்டவளாய், அவள் அவருக்கு முன்பாக நிலைகுலைந்து, "அவள் காலைப் பிடித்துக்கொண்டாள்" (வசனம் 27அ). பாதத்தில் விழுவது என்பது ஒருவருடைய தாழ்மை மற்றும் சார்ந்திருத்தலை குறிக்கிறது (காண்க லூக்கா 5:8; மாற்கு 5:22; 7:25). பாதங்களை தழுவுதல் என்பது நெருக்கமான ஒரு செயலை காண்பிக்கிறது (காண்க மத்தேயு 28:9).*

*கேயாசி பெண்ணின் இந்த செயல் அவ்வளவு கவுரமானதாக இருக்கவில்லை என நினைத்தான். அப்பொழுது கேயாசி, "அவளை விலக்கிவிடவந்தான்" (வசனம் 27ஆ; ஒப்பிடுக மத்தேயு 19:13). தேவனுடைய மனுஷன், "அவளைத் தடுக்காதே; அவள் ஆத்துமா துக்கமாயிருக்கிறது; கர்த்தர் அதை எனக்கு அறிவியாமல் மறைத்து வைத்தார் என்றான்" (2 இராஜாக்கள் 4:27ஆ). ஏதோ ஒரு துயரமான சம்பவம் அவளுக்கு நேரிட்டிருந்தது, ஆனால் அது என்ன என்பது எலிசாவுக்கு தெரிந்திருக்கவில்லை என்பது தெளிவாக தெரிகிறது. ஆவியினால்*

ஏவப்பட்டு பேசினவர்கள் கூட, ஒரு நாளில் இருபத்தி நான்கு மணிநேரமும் இயற்கைக்கு மேம்பட்ட விதத்தில் நடத்தப்படவில்லை.

இறுதியில் அந்த பெண் பேசியபோது, அவள் தன் துக்கத்தை வெளிப்படுத்தினாள். அவள் தன் மனவேதனையை ஊற்றிவிட்டாள். அப்பொழுது அவள், "நான் என் ஆண்டவனிடத்தில் ஒரு குமாரனை வேண்டும் என்று கேட்டதுண்டா?" "எனக்கு அபத்தம் சொல்ல வேண்டாம் என்று நான் சொல்ல வில்லையா" என்றாள் (வசனம் 28; காண்க வசனம் 16). அவளுடைய அருமை யான குமாரன் கேட்கப்படவுமில்லை மற்றும் எதிர்பார்க்கப்படவுமில்லை; இப்போது அவன் மறைந்துபோய்விட்டான்! கர்த்தர் தமது "கிருபையின் சிறப்பு செயல்விளக்கமாக மற்றும் அவருடைய வார்த்தையின் நம்பகத் தன்மையின் அடையாளமாக அவர் தந்தவனை அவர் எப்படி எடுத்துக்கொள்ளக்கூடும் என்ற கேள்வியால் அவள் வாதிக்கப்பட்டாள்."[11] உண்மைபொருளில் "நான் இதை புரிந்து கொள்ளவில்லை! இது எனக்கு ஏன் சம்பவிக்கிறது?" என கேட்டாள். எலிசா இந்த பெண்ணின் வார்த்தையால் எளிதில் இடறலடைந் திருக்கலாம். ஆனால் அவர் அவ்விதம் இடறலடையவில்லை, துக்கத்தால் மேற்கொள்ளப்படுகிறவர்கள் அதின் எல்லைக்கே போய் உணர்ச்சிவசப்பட்டு பொருத்தமற்றவைகளை பேசக்கூடியவர்களாயிருக்கிறார்கள் (காண்க 1 இராஜாக்கள் 17:18), அதை அவர் புரிந்து கொண்டார்.

அவளுடைய வார்த்தைகளில் இருந்து ஏதோ ஒரு பயங்கரமான காரியம் அவள் மகனுக்கு நேரிட்டிருந்தது என்பது தெரிகிறது, ஆனால் என்ன சம்பவத் திருந்தது என்பது தான் தெரியவில்லை. அந்த மகன் மரித்துவிட்டான் என்பதை எலிசா புரிந்திருந்தாரா அல்லது அவனுக்கு ஏதோ ஒரு வியாதி அல்லது காயம் ஏற்பட்டிருந்தது என அவர் சிந்தித்திருக்கக் கூடுமா? பதிவு செய்யப்படாத கூடுதல் தகவல்களை அந்த பெண் சேர்ந்திருந்தாளா?[12] கர்த்தர் தீர்க்கதரிசிக்கு கூடுதல் புரிந்து கொள்ளுதலை கொடுத்தாரா? இந்தக் கேள்விக்கு நாம் உறுதி யாக பதில் கூற இயலாது.

அந்த பையனுடைய விஷயத்தில் என்ன தவறு நடந்திருந்தாலும், *ஏதோ ஒன்று* - அவசரமாக செய்யப்படவேண்டி இருந்தது. அப்பொழுது அவன் கேயாசியை பார்த்து: "நீ உன் இடையை கட்டிக்கொண்டு … , உன் வழியே போ" (2 இராஜாக்கள் 4:29அ). "இடையை கட்டிக் கொள்" என்பது "நீ உன் கால்களை எடுத்து வைத்து, வேகமாய் ஓடுவதற்காக உன் கயிற்றை உன் இடுப்புப்பட்டையோடு பொருத்திவிடு" என பொருள்படும். [NIV மொழிபெயர்ப்பை காணவும்], (ஒப்பிடுக 1 இராஜாக்கள் 18:46). மேலும் எலிசா, "வழியில் ஒருவனைச் சந்தித்தாலும் அவனை வினவாமலும், உன்னை ஒருவன் வினவினாலும் அவனுக்கு மறுமொழி சொல்லாமலும் போய்" (2 இராஜாக்கள் 4:29ஆ; ஒப்பிடுக லூக்கா 10:4). நலம் விசாரிக்கும் சம்பிரதாயங்கள் அதிக நேரத்தை எடுத்துக் கொள்பவைகளாகும். தீர்க்கதரிசி தன் வேலைக்காரனிடம் எவ்வளவு விரைவாக செல்லமுடியமோ அவ்வளவு விரைவாக அந்த பெண்ணின் வீட்டிற்கு செல்லும்படியும் மற்றும் *எதுவும்* அவனை தாமதப்படுத்த அனுமதிக்க வேண்டாம் எனவும் கூறியிருந்தான்.

எலிசா கேயாசியிடம் தன் தடியை கொடுத்திருந்தான் (வசனம் 29அ). மேலும் அவர் அந்த தாயின் வீட்டை சேரும்போது, அவன் "தன் தடியை பிள்ளையின் முகத்தின் மேல் வை" என கூறியிருந்தான் (வசனம் 29இ). எலியாவின் சால்வை

அவனுடைய அதிகாரத்தின் அடையாளமாயிருந்தது: அநேகமாக எலிசாவுக்கு அவன் ஊன்றுகோல் அடையாளமாயிருந்தது (ஒப்பிடுக யாத்திராகமம் 4:1-4; 14:16; 17:5, 6, 8-13). எலிசா ஏன் கேயாசிக்கு இந்த அறிவுரைகளை வழங்கினார்? எலிசா மற்றும் அந்த பெண் ஆகியோருக்கு ஒரு பாடத்தை போதிப்பது மற்றும் இப்படிப்பட்ட காரியங்கள் *பலனளிக்காது* என்பதை காட்டுவதுதான் இதன் நோக்கமாக இருந்தது என்று சிலர் நம்புகிறார்கள்.[13] எப்படியிருப்பினும், ஆவியானவரால் ஏவப்பட்ட பதிவு அந்த பெண் கூறிய எல்லாவற்றையும் கொடுத்துள்ளது எனவும் கர்த்தர் அந்த பிரச்சனையின் உண்மையான விபரத்தை எலிசாவுக்கு "மறைந்திருந்தார்" எனவும் நாம் யூகிக்கிறோம் (2 இராஜாக்கள் 4:27), அந்த தடியின் பிரசன்னம்/பயன்பாடு பிரச்சனை எதுவாயிருப்பினும் - அந்த பிள்ளைக்கு உதவ*முடியும்* என எலிசா நினைத்தார்.[14] அது உண்மை யெனில், அவன் கேயாசியை தடியுடன் தனக்கு முன் அனுப்பினார், ஏனெனில் வேலைக்காரன் இளைஞனும் வேகமாக செல்லக்கூடியவனுமாய் இருந்தான்.

அந்த தாய் எலிசாவின் வார்த்தைகளிலிருந்து அவர் தாமே தன் வீட்டுக்கு வருவதில்லை என்பதை உணர்த்தினார் என நினைத்தாள். அந்த பெண், "நான் உம்மை விடுகிறது இல்லை என்று கர்த்தரின் ஜீவனையும் உம்முடைய ஜீவனையும் கொண்டு சொல்கிறேன்" என்று கூறியபோது அவள் கண்களில் ஒளி பிரகாசித்ததா (வசனம் 30அ; ஒப்பிடுக 2 இராஜாக்கள் 2:2, 4, 6)? வேறு வார்த்தைகளில் கூறுவதென்றால், "நீங்கள் வராமல் நான் போகமாட்டேன்!" என கூறினாள். தீர்க்கதரிசி சூனேமுக்கு போக எண்ணியிருந்தாரோ அல்லது இல்லையோ, "அப்பொழுது அவன் எழுந்திருந்து அவள் பின்னே போனான்" (வசனம் 30ஆ). மறுபடியும் அந்த பெண் தன் வேலைக்காரனையும் தன் கழுதையையும் மற்ற விலங்கோடு துரிதப்படுத்துவதை பார்க்கிறோம்: தீர்க்கதரிசியானவர் அவர்கள் வேகத்திற்கு ஈடு கொடுத்து பின்னே செல்ல முயற்சிக்கிறார்.

அந்த நேரத்தில் கேயாசி அந்த பெண்ணின் வீட்டை அடைந்து, தீர்க்கதரிசியின் அறையை நோக்கி படிகளில் ஓடி, "அந்த தடியை பிள்ளையின் முகத்தின்மேல் வைத்தான்" (வசனம் 31அ). இந்த பொறுப்பு தனக்கு கொடுக்கப்பட்ட அவனுக்கு ஒரு மெய்சிலிர்க்கும் அனுபவமாக இருந்தது. "ஆனாலும் எந்த சத்தமும் இல்லை, எந்த உணர்ச்சியும் இல்லை" என்ற நிலை அவனுக்கு எவ்வளவு ஏமாற்றமாக இருந்திருக்கும் (வசனம் 31ஆ). "உயிரோடிருப்பதற்கான எந்த அடையாளமுமில்லை" என NEB கூறுகிறது. அவன் படிகளில் வேகமாய் இறங்கி அந்த பெண்ணையும் எலிசாவையும் சந்தித்தான். அவன் தன் தலையை அசைத்துக் கொண்டு தன் எஜமானை நோக்கி, "பிள்ளை விழிக்கவில்லை" என அவன் அறிவித்ததை நான் பார்க்கிறேன் (வசனம் 31இ). ஒருவேளை அந்த பெண் தனக்குள் தானே, "இந்த தடியின் நிவாரணம் பயன்படாது! அதினால் தான் நான் எலிசா தானே வரவேண்டுமென வற்புறுத்தினேன்!" என சிந்தித்தாள்.

## சோதனை மற்றும் வெற்றி (4:32-37)

### சோதனை

அந்த பெண் மற்றும் அந்த மனிதர் ஆகியோர் பயணத்தை தொடர்ந்தனர். இறுதியாக, வீட்டை வந்தடைந்தனர். பையன் நண்பகலில் மரித்துவிட்டான்

(வசனம் 20), - அதன் பின் தாய் கர்மேலுக்கு பயணித்தார் - ஆகவே இப்போது அது பிந்தின மாலைவேளையாக இருந்திருக்கும். சாதாரணமாக, எலிசா இப்படிப்பட்ட ஒரு பயணத்தின் பிறகு தன் அறைக்கு ஓய்வு எடுக்க சென்றுவிடுவார். இம்முறை அவருக்கு ஓய்வெடுக்க நேரமில்லை. எலிசா வீட்டிற்குள் வந்தபோது, "இதோ, அந்த பிள்ளை அவன் கட்டிலின்மேல் செத்துக்கிடந்தான்" (வசனம் 32). இந்த பிரச்சனையின் ஆழத்தை எலிசா புரிந்து கொண்டது இப்போது தான் முதல் முறையாக இருந்திருக்கும். அந்த பிள்ளை எந்த பாவமும் அறியாமல் தூங்குவதுபோல் கட்டிலில் செத்துக்கிடந்த காட்சி அவன் உள்ளத்தை உடைத்திருக்க வேண்டும்.

எலிசா உள்ளே போய் கதவை பூட்டினான் (வசனம் 33அ; ஒப்பிடுக வசனம் 4அ), அந்த தாய் மற்றும் கேயாசி ஆகியோரை வெளியே விட்டுவிட்டான் (ஒப்பிடுக 1 இராஜாக்கள் 17:19, 23). அவன் சிறுவனோடு தனியாக இருந்தபோது, அவன் "கர்த்தரை நோக்கி வேண்டுதல்" செய்தான் (2 இராஜாக்கள் 4:33ஆ). அவன் தாய் தன்னை கர்மேலில் சந்தித்ததிலிருந்து அவன் ஜெபித்துக் கொண்டுதான் இருந்தான். இப்போது அவன் அந்த சூழ்நிலையை நேரில் பார்த்தபின்னர், அவன் ஜெபங்கள் அதிக ஊக்கமானவைகளும் அதிக கவனமானவைகளுமாக இருந்திருக்கும்.

அவன் "கிட்டப்போய், தன்வாய் பிள்ளையின் வாயின் மேலும், தன் கண்கள் அவன் கண்கள் மேலும், தன் உள்ளங்கைகள் அவன் உள்ளங்கைகளின் மேலும் படும்படியாக அவன்மேல் குப்புறப்படுத்துக் கொண்டான்; அப்பொழுது பிள்ளையின் உடல் அனல் கொண்டது" (வசனம் 34). எலிசா ஏன் இந்த விநோதமான காரியத்தை செய்தார்? அநேகமாக, அவருடைய எஜமான் இவ்விதம் தான் மரித்துப்போன ஒரு பையனை உயிர்ப்பித்திருந்தார் (காண்க 1 இராஜாக்கள் 17:21, 22). எலியாவைப் பற்றிய ஒரு பாடத்தில், தீர்க்கதரிசி சாரிபாத் ஊர் விதவையின் மகனை உயிர்ப்பித்தது தொடர்பாக பின்வருமாறு எழுதியிருந்தேன்:

> இதற்கு முன் ஒருபோதும் இது நிகழவில்லை என்பதை நினைவில் வையுங்கள் ... எலியாவின் நாள்வரை பல்லாயிரக்கணக்கான மக்கள் அடக்கம் செய்யப்பட்டு வந்திருக்கிறார்கள்; ஒருவர் கூட உயிரடைந்து வந்தது இல்லை ... எலியா சாத்தியமில்லாததை செய்ய முயற்சி செய்து கொண்டிருந்தார் ... இதற்கு முன் இப்படி செய்யப்பட்டது என எந்த ஒரு முன் உதாரணமும் இருக்கவில்லை கடைப்பிடிப்பதற்கு எந்த கையேடும் இருக்கவில்லை. ...
>
> மரித்தோரை உயிரோடெழுப்புவது எப்படி என்பதாக ஒரு கையேடு எலியாவுக்கு இல்லாமல் இருந்ததால், அவர் என்ன செய்தாரோ அது "உன்னால் என்ன முடியுமோ அதை செய்" என்ற தலைப்பின் கீழ்வந்தது. அநேகமாக, தன் சரீர சூட்டை பயன்படுத்துவது அவருக்கு நியாயமாக, கண்டது, ஆகவே அவர் அப்படிசெய்தார். மேலும், அந்த பையன் உயிரோடு எழுந்த பின், அதில் அவர் திருப்தியடைந்தார் என நினைக்கிறேன். அதினால் அவர் அதை எலிசாவிடம் தெரிவித்தார், மேலும் எலிசா பிற்பாடு அதே காரியத்தை செய்தார் (2 இராஜாக்கள் 4). இது அவ்விதம் செய்யப்பட வேண்டியதாயிருந்ததா? அநேகமாக இல்லை. ...[15]

நமது கதை தொடர்கையில், *எலிசா தேவனிடம் ஜெபித்துக் கொண்டிருந்தார்* என்பதை மறந்து விடாதீர்கள் (2 இராஜாக்கள் 4:33). சால்வையினால் தண்ணீரை அடிக்க, அது பிரிந்ததற்கும் (2:14) அல்லது உப்பை கொட்டியதற்கும், கெட்டுப்போன தண்ணீர் தூய்மை அடைந்ததற்கும் என்ன சம்மந்தமோ (2:21) அதே சம்பந்தம் தான் எலிசா சிறுவன் குப்புறப்படுத்துக் கொண்டதற்கும் அவன் உயிரடைந்ததற்கும் இருக்கிறது. வல்லமை என்பது ஒரு சடங்கில் அல்ல ஆனால் அது ஒரு உறவில் இருக்கிறது: தேவனோடு எலிசாவுக்கு இருந்த உறவு. வல்லமை அவனுடைய தேவனிடத்திலிருந்து வந்தது.

### வெற்றி

எலிசா சிறுவன் மேல் குப்புறப்படுத்தபின்பு, சிறுவனுடைய உடல் "அனல் கொண்டது" (4:34), ஆனாலும் உயிரடைந்ததற்கான எந்தவித அறிகுறியும் இருக்க வில்லை. தீர்க்கதரிசி படுக்கையிலிருந்து எழுந்து இங்கும் அங்கும் உலாவினார் (வசனம் 35அ), அநேகமாக அடுத்து என்ன செய்வதென்றறியாத நிலையில் அப்படிச் செய்தார். அவருடைய ஜெபங்கள் மிகவும் ஊக்க மானவைகளாக மாறின. இறுதியாக, எலியாவின் செயல்முறையை இன்னொரு முறை செய்ய தீர்மானித்தார். மறுபடியுமாக அவர் அந்த சிறுவனின் உடல்மேல் குப்புறப்படுத்துக் கொண்டார் (வசனம் 35ஆ). இந்த முறை அவர் முயற்சிகளுக்கு பலன் கிடைத்தது. "அப்பொழுது அந்த பிள்ளை ஏழுதரம் தும்மித் தன் கண்களைத் திறந்தான்" (வசனம் 35இ).

எழுத்தாளர்கள் ஏழுமுறை தும்மியதில் சிறப்பு அர்த்தங்களை கண்டுபிடிக்க முயல்கின்றனர்.[16] சில பழைய வியாக்கியான புத்தகங்கள் தும்மல்களால் விஷத்தன்மையுள்ள பொருட்கள் வெளியேறியது பற்றி பேசுகிறார்கள் - ஆனால் சாத்தியமான உயிருக்கு ஆபத்தான வியாதிகளில் விஷத்தன்மையுள்ள பொருட்கள் இருந்ததாக விவாதிக்கப்படவில்லை. மருத்துவ ரீதியான ஒரு விளக்கம் தேவையானால், அந்த பையன் புழுதி நிறைந்த அறுவடை களத்தில் இருந்த போது நோய்வாய்ப்பட்டான், அவனுடைய நாசிகள் மற்றும் முககாற்றறைகள் இன்னும் புழுதி மற்றும் மகரந்த துகள்களாலும் நிறைந்திருந்தன.[17] யூதர்களுக்கு புனிதமான எண்ணாக கருதிய ஏழில் ஏதோ உருவக அர்த்தம் இருப்பதாக சிலர் காண்கிறார்கள். "எப்படிப்பார்த்தாலும், மக்கள் பெரும்பாலும் இரண்டு முறைதான் தும்முகிறார்கள்" என அவர்கள் கூறுகிறார்கள். நாம் மறைபொருளான அர்த்தங்களை தேடவேண்டும் என இந்த வசனப்பகுதியில் எதுவும் சொல்லப்படவில்லை. சாட்சி கூறுகிற ஒருவர் ஏழு முறை தும்மியதை ஒரு தற்செயல் நிகழ்வாக கூறுவார். எலிசா என்ன நிகழ்ந்தது என்பதை கேயாசியிடம் கூறினார். பதிலுக்கு வேலைக்காரன் அதை பிறரிடம் கூறினான் (காண்க 8:4, 5).

வேதவசனத்தில் அந்த பையன் ஏன் தும்மினான் என்பது பற்றி ஒரு எளிமை யான விளக்கம் இருக்கிறது: அதாவது, அந்த பையன் மறுபடியும் சுவாசித்தான் என்பதற்கு அது நிரூபணமாக இருந்தது! அவன் தும்மியது மட்டுமல்ல, அவன் கண் விழித்தும் பார்த்தான்! உயிர் அவன் உடலுக்கு மறுபடியும் திரும்பி வந்துவிட்டது! தேவனுடைய வல்லமையினால் எலிசா, "செத்துப்போனவனை உயிர்ப்பித்தார்" (8:5)! இந்த சிறுவன் தனது நண்பனான தீர்க்கதரிசியைப் பார்த்து புன்னகைப்பதையும் - எலிசா அவனை பார்த்து பதிலுக்கு புன்னகைப்பதையும்

*நான் பார்க்க முடிகிறது.*

*கேயாசி அவசியம் ஏற்பட்டால் உள்ளே செல்வதற்காக கதவுக்கு வெளியே தன்னை நிறுத்தியிருந்தான். அப்பொழுது எலிசா: கேயாசியைக் கூப்பிட்டு, "அந்த சூனேமியாளை அழைத்துக் கொண்டு வா" என்றான் (4:36அ). அந்த தாய் மாடிப்படியில் ஏறிவருகையில், என்ன எதிர்பார்ப்பது என அவளுக்கு தெரியவில்லை. எலிசா எலியா செய்த அற்புதங்களை தானும் செய்திருந்தார் என அவள் நம்பியிருந்தாள், ஆனால் அவள் மறுபடியும் ஏமாற்றமடைவதைப் பற்றி அஞ்சியிருப்பாள். அவள் கதவண்டையில் வந்தபோது, எலிசா படுக்கையில் கிடந்த பையனை சுட்டிக் காண்பித்து - அவன் இப்போது உயிரோடிருக்கிறான் - "உன் குமாரனை எடுத்துக் கொண்டுபோ" என கூறியபோது அவளுக்கு எவ்வளவு சந்தோஷம் உண்டாகியிருக்கும் என்பதை கற்பனை செய்து பாருங்கள் (வசனம் 36ஆ).*

*அந்த தாய் படுக்கையை நோக்கி ஓடியிருப்பாள் என நாம் எதிர்பார்க்கலாம். அதற்கு பதிலாக, அவள் நன்றியுணர்வோடு பாதத்தில் விழுந்தாள் (வசனம் 37அ). அதன் பிறகு, அதன் பிறகு மட்டுமே அவள் தன் அன்பான மகனை கைகளில் எடுத்துக் கொண்டுபோனாள் (வசனம் 37ஆ). அதற்கு பிறகு அவள், "வெளியே போனாள்" என வசனம் கூறுகிறது (வசனம் 37இ), அவள் கன்னத்தில் ஓடின ஆனந்த கண்ணீரை நாம் கற்பனை செய்யலாம். இதற்கு முன்பு, அந்த பையன் அவளுக்கு மிகவும் விலையேறப்பெற்றவனாக இருந்தான், இப்போதோ அவனோடிக்கிற ஒவ்வொரு இமைப்பொழுதும் கர்த்தரிடத்திலிருந்து வந்த ஒரு சிறப்பான ஆசீர்வாதமாக இருக்கிறது. நாட்கள் நகர்ந்து செல்ல, தன் மகன் பெலசாலியாக மற்றும் உயரமானவனாக வளர்ந்ததை அவள் கவனித்தபோது, அவள் நிச்சயமாக பரலோகத்தை தன் நன்றி பெருக்கால் நிரப்பினாள்.*

## குழப்பம் மற்றும் ஆறுதல்

*குழப்பம்*

*அந்த பெண் தன் மகனை பறிகொடுத்தது - அதை தொடர்ந்து அவளுக்கு ஏற்பட்ட குழப்பம் மற்றும் துக்கம் ஆகியவை பற்றிய காட்சியை நாம் காண்கையில் உங்களில் சிலர் உங்களை அவளோடு அடையாளப்படுத்திக் கொண்டிருப்பீர்கள். அநேகமாக, உங்கள் வாழ்க்கையில் சோதனைகள் நேரிட்டுள்ளன, அவைகள் ஏன் ஏற்பட்டன என்பதை புரிந்து கொள்ள முடியாமல் நீங்கள் தடுமாறிக் கொண்டிருக்கிறீர்கள். ஒருவேளை உங்கள் குடும்பத்தை ஆதரித்துக்கொண்டிருந்த வேலையை நீங்கள் இழந்து விட்டீர்கள். உங்கள் மருத்துவ செலவுகள் உங்கள் சேமிப்பை கரைத்துவிட்டன. பிள்ளைகளை வளர்க்கும் பொருப்பை உங்கள் மேல் திணித்துவிட்டு, உங்கள் துணை உங்களை அம்போ என கைவிட்டு போயிருக்கலாம். சூனேமியாளுக்கு நேரிட்டதுபோல், நீங்கள் நேசித்த ஒரு பிள்ளை மரித்துபோயிருக்கலாம். உங்கள் சோகம் எதுவாக இருந்தாலும் இவ்விதமாய் கதறி அழவேண்டுமென உங்களுக்கு தோன்றலாம், "என்னால் இதை புரிந்து கொள்ள முடியவில்லை! இது ஏன் எனக்கு சம்பவித்துக் கொண்டிருக்கிறது?"*

**ஆறுதல்**

*சோகம் உங்களை சிதைத்துக் கொண்டிருக்குமானால், நீங்கள் நமது வசனப்பகுதியின் இரண்டு விளக்கங்களிலிருந்து ஆறுதலடையலாம்: (1) அந்த தாய் எலிசாவிடம் புகார் கூறியபோது, தீர்க்கதரிசியானவர் அவளை கடிந்து கொள் வில்லை. நீங்கள் பிரச்சனைகளில் மூழ்கிப்போய்விட்டதாக உணரும்போது, - தேவனானவர் உங்களை புரிந்து கொள்கிறார் மற்றும் அவர் இன்னமும் உங்களை நேசிக்கிறார். (2) முடிவில், தேவன் அந்த தாயின் மன சஞ்சலத்தை அழித்துவிட்டார் மற்றும் அவளுக்கு எல்லாம் சரியாக மாறின. 2 இராஜாக்கள் 4:18-37இல் செய்யப்பட்டபடி, தேவன் உங்களுடைய பிரச்சனைகளை எடுத்துப்போடுவார் என என்னால் வாக்குறுதி எதுவும் கொடுக்கவியலாது, ஆனால் உங்கள் கடினமான சூழ்நிலைகளைத் தாங்கவும் மற்றும் அவைகளை மேற்கொள்ளவும் அவர் உங்களுக்கு பெலத்தை கொடுக்க வல்லவராயிருக்கிறார் என்ற வாக்குறுதியை என்னால் கொடுக்கமுடியும். தேவனானவர் இன்னமும், "அன்றியும், அவருடைய தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டவர்களாய் தேவனிடத்தில் அன்புகூருகிறவர்களுக்குச் சகலமும் நன்மைக் கேதுவாக நடக்கிறதென்று அறிந்திருக்கிறோம்" (ரோமர் 8:28), என்ற இந்த வசனத்தின்படி செயல்படுகிற தேவனாக இருக்கிறார்.*

*தங்கள் வாழ்நாளெல்லாம் விசுவாச வாழ்க்கை வாழ்ந்தவர்கள் இந்த முக்கியமான கொள்கையை கற்றிருக்கிறார்கள்: காரியங்கள் எப்போதும் அவைகள் காணப்படுகிறபடி இருப்பதில்லை. இதை விளக்குகிற ஒரு கதையை நான் சமீபத்தில் கேள்விப்பட்டேன்.[18] 1900ஆவது ஆண்டுகளில் வாழ்ந்த ஒரு மனிதன் ஒரு சொகுசுக் கப்பலின் முதல் பயணத்தின்போது, இசைக்கலைஞராக பணி அமர்த்தப்பட்டார். இது மிகப்பெரிய ஒரு கவுரவம். அவர் உணர்வுமயப்பட்டவராக இருந்தார். அவர் தனக்கு முன்பாக, தன் இசைக்கருவிகளை கப்பலுக்கு அனுப்பிவைத்தார்; அவர் கப்பல் செப்பனிடும் துறைக்கு வந்துகொண்டிருந்தபோது, அவர் கடத்தப்பட்டு, ஓரியன்ட் என்ற இடத்திற்கு கொண்டு செல்லப்பட்டார். அவருடைய எண்ணங்கள் எப்படிப்பட்ட எதிர்மறையானவைகளாக இருந்திருக்கும் என ஒருவர் யூகிக்க முடியும்: "இது எனக்கு ஏன் நடந்து கொண்டிருக்கிறது? இது எனது மிகப்பெரிய வாய்ப்பாக இருந்தது, ஆனால் என்ன ஆயிற்று என்று பாருங்கள்! எனது வாழ்க்கை அழிந்துபோய்விட்டது! இது ஏன் எனக்கு நடந்தது? ஏன்?" ஒருவழியாக, அந்த மனிதன் அங்கிருந்து தப்பி, சீனாவுக்கு சென்று கொண்டிருந்தார். அங்கே தான் பயணிக்கவிருந்த கப்பல் - டைட்டானிக் - மூழ்கிவிட்டது என கேள்விப்பட்டான், அதில் 1500 பேர் உயிரிழந்தனர்.[19] அந்த மனிதன் தன்னை கடத்தினவர்களுக்கு ஒரு நன்றி குறிப்பு அனுப்பவில்லையா என நான் சந்தேகப்படுகிறேன், தனக்கு நேரிட்ட துன்பம் தொடர்பான அவன் எண்ணப்போக்கு மாறிவிட்டது என்பது உங்களுக்கு தெரியாதா?*

*ஆண்டுகளினூடே, பல கிறிஸ்தவர்கள் தங்களுக்கு நேரிட்ட கடந்தகால ஆபத்தை குறித்து என்னிடம் சொல்லியிருக்கிறார்கள் - பின்னர் அந்த சோகங்கள் தங்களுக்கு அப்போது நேரிடாமல் இருந்திருந்தால், இப்போதைய ஆசீர்வாதங்கள் தங்களுக்கு இருந்திருக்காது என்பதையும் கூடவே குறிப்பிட்டார்கள்.[20] சில சமயங்களில், "எனக்கு நேரிடச் சாத்தியமான மிக சிறந்த காரியமாக இது இருந்தது!" என கூட குறிப்பிட்டார்கள்.*

*அந்த துயருறும் தாய் நமது கதையில், தன் இருதயத்தில் "எல்லாம் - சரி"யாக இருந்தது என உணரமுடியாமலிருந்தபோதிலும், (வசனம் 28) இரண்டு முறை "சுகம்தான்" என கூறினாள் (வசனம் 26; காண்க வசனம் 23). பிற்பாடு, அவள் நடந்ததை திரும்பி பார்த்து, "அப்போது நான் அதை உணராதிருந்த போதிலும், உண்மையில் எல்லாம் சரியாகவே இருந்திருக்கிறது!" என வியந்து கூறினாளா? நீங்கள் ஒரு உண்மையுள்ள தேவனுடைய பிள்ளையாக இருப்பீர்களானால், நீங்களும் - எந்த நேரத்திலும், எந்த இடத்திலும், எந்த சூழ்நிலையிலும் "எல்லாம் சுகம்தான்!" என நம்பிக்கையோடு கூறலாம்.*

> சமாதானம் ஒரு ஆற்றைப்போல் என் வழியில் வந்தபோதும்,
> துக்கங்கள் கடல் அலைபோல் என்மேல் மோதிய போதும்;
> என் பங்கு எதுவாக இருந்தபோதும்,
> "எல்லாம் சுகம், என் ஆத்துமாவோடு எல்லாம் சுகம்" என கூற
> நீர் எனக்கு போதித்தீர்.[21]

*கர்த்தரிலுள்ள உங்கள் விசுவாசத்தை பராமரியுங்கள் மற்றும் தொடர்ந்து அவரை சார்ந்திருங்கள், "எல்லாம் சுகம் தான்" என்ற இந்த வார்த்தைகள் உங்கள் வாழ்வின் குறிக்கோளாகட்டும். தேவன் நீதிமான்களிடம் "உங்களுக்கு நன்மையுண்டாகும் என்று நீதிமான்களுக்குச் சொல்லுங்கள்" என்பதை ஏசாயா தீர்க்கதரிசி உறுதியாக கூறும்படி செய்தார் (ஏசாயா 3:10). உங்கள் கர்த்தருக்கு நீங்கள் உண்மையாயிருங்கள், "அப்போது நீங்கள் நெருங்கி வரும் ஒவ்வொரு துயரகாலத்திலும் அல்லது எதிர்ப்புகள் மத்தியிலும் அல்லது மனசோர்வின் வேளையிலும் எல்லாம் நலமாக இருக்கிறது என்று நம்பிக்கையோடு கூறலாம்; மரிக்கும் தருவாயிலும் எல்லாம் உங்களுக்கு நலமாக இருக்கும்; நியாயத்தீர்ப்பின் நாளிலும் அதைத் தொடர்ந்து வரும் நித்தியத்திலும் உங்களுக்கு எல்லாம் நலமாயிருக்கும்."[22]*

## முடிவுரை

இந்தப் பாடத்தை நான் முடிக்கிற வேளையில், நான் கேயாசி அந்த பெண்ணிடம் கேட்ட கேள்வியை "நீ சுகமா*யிருக்கிறாயா*" என கேட்க விரும்புகிறேன். *உங்களுக்கும் தேவனுக்கும் இடையில் எல்லாம் சரியாக இருக்கிறதா? உங்கள் ஆத்துமா நலமாயிருக்கிறதா? "உலகம் உங்களை பார்த்து புன்முறுவல் செய்யும், நண்பர்கள் உங்களைப் புகழ்ந்து பேசலாம், ஆனால் உங்கள் சொந்த இருதயம் உங்களை ஏமாற்றலாம்."[23] ஆனால் தேவனோடு உங்களுக்கு உள்ள உறவு சரியாக இல்லாமல் இருக்குமானால், உங்கள் வாழ்க்கையில் எதுவுமே சரியாக இருக்க முடியாது. அவர் உங்களை தன் பிள்ளையாக அணைத்துக்கொள்வதற்கு அன்பின் கீழ்ப்படிதலோடு நீங்கள் அவரிடம் வரவேண்டிய அவசியம் இருக்கிறதா (மாற்கு 16:16; எபிரெயர் 5:9) நீங்கள் ஒரு கீழ்ப்படியாத பிள்ளையாக (கலாத்தியர் 3:26, 27)? அல்லது தவறிழைத்த பிள்ளையாக இருந்தீர்களா? அப்படியானால், நீங்கள் அவரிடம் திரும்ப வேண்டிய அவசியமிருக்கிறது (நடபடிகள் 8:22; 1 யோவான் 1:9). உங்கள் ஆவிக்குரிய நிலை எதுவாக இருப்பினும், அவருடைய கிருபை மற்றும் இரக்கம் ஆகியவற்றின் மேல் உங்களை ஊற்றிவிடுங்கள், அப்போது நீங்கள் என்*

*வாழ்க்கையில் "எல்லாம் நலமாயிருக்கிறது" என கூற முடியும்!*

---

குறிப்புகள்

[1]Donald J. Wiseman, *1 and 2 Kings: An Introduction and Commentary,* Tyndale Old Testament Commentaries (Downers Grove, Ill.: Inter-Varsity Press, 1993), 204. [2]Charles B. Clayton, ed., "headache," *The American Medical Association Home Medical Encyclopedia* (New York: Random House, 1989), 1:507. Aneurysm *என்பதுஒரு குறிப்பிட்ட இடத்திலுள்ள இரத்த நாளங்களின் வீக்கம், இந்த சம்பவத்தில், அது மூளையிலுள்ள ஒரு இரத்த நாளத்தின் வீக்கமாக இருந்திருக்கலாம்.* [3]Adaped from J. T. Headley, *Sacred Heroes and Martyrs*, rev. and ed. J. W. Kirton (London: Ward, Lock, & Tyler, n.d.), 194. [4]G. Rawlinson, "2 Kings," *The Pulpit Commentary,* vol. 5, *1&2 Kings,* ed. H. D. M. Spence and Joseph S. Exell (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1950), 66. [5]Wiseman, 204. [6]C. F. Keil and F. Delitzsch, "1 and 2 Kings," *Commentary on the Old Testament,* vol. 3, *1 and 2 Kings, 1 and 2 Chronicles, Ezra, Nehemiah, Esther* (Peabody, Mass.: Hendriksen Publishers, 1989), 311. [7]C. H. Irwin, *Irwin's Bible Commentary* (Philadelphia: John C. Winston Co., 1928), 116. [8]Keil and Delitzsch, 311. [9]*அந்த பெண் தங்கள் மகன் மரித்துவிட்டான் என்பதை ஏன் கணவரிடம் கூறவில்லை? ஒருவேளை அவர் அடக்கம் செய்வதற்கான ஏற்பாடுகளை வலியுறுத்துவார் என பயந்திருந்தாள். ஒருவேளை தன் கணவரிடம் தங்கள் மகன் மரித்த கதையைச் சொல்லும்போது, அவனை உயிரோடு காண்பிக்க முடியுமென நம்பியிருந்தாள்.* [10]Keil and Delitzsch, 311-12.

[11]J. Robert Vannoy, notes on 2 Kings, *The NIV Study Bible*, ed., Kenneth Barker (Grand Rapids, Mich.: Zondervan Publishing House, 1985), 530. [12]The fact that Gehazi knew where to go in the house to lay the staff on the boy's face (v. 31) may indicate that the woman gave additional details. [13]Keil and Delitzsch, 312-13. [14]*ஒரு சமயத்தில், பவுலின் உடைப்பகுதிகள் வியாதியஸ்தர்மேல் பட அவர்கள் சுகமானார்கள் (காண்க நடபடிகள் 19:11, 12).* [15]David Roper, "When Roof Caves In," in "Elijah, 1," *Truth for Today* (August 1993): 24. [16]*"கிரேக்க வசனப்பகுதியில் (பழைய ஏற்பாட்டின் கிரேக்க மொழிபெயர்ப்பு) தும்முதல் என குறிப்பிடப்படுவதில்லை. ஆனால் எலிசா ஏழு முறை அந்த பையன் மேல் குப்புறப்படுத்தார் என சுட்டிக்காட்டுகிறது"* (Clyde M. Miller, *First and Second Kings*, The Living Word Commentary series, vol. 7 [Abilene, Tex.: A.C.U. Press, 1991], 328). [17]*எனது வகுப்பில் கலந்து கொண்ட ஒரு மருத்துவ செவிலியர், வயல்வெளியின் தூசியினால் தூண்டப்பட, பிள்ளைகள் ஆஸ்துமாவினால் மரிப்பது இன்றும் சாத்தியமானது என சுட்டிக்காட்டினாள்.* [18]This story was related to me by Angi (Roper) Lovejoy, Edmond, Oklahoma, 22 July 2003. Angi read the story on a display at the Titanic exhibit in Oklahoma City, Oklahoma. [19]The Titanic, the largest passenger ship ever built at the time, sank on its maiden voyage after striking icebergs (14-15 April 1912). [20]*நீங்கள் உங்களுடைய அல்லது மற்றவர்களுடைய அனுபவத்திலிருந்து ஓரிரு உதாரணங்களை சேர்க்கலாம்.*

[21]Horatio G. Spafford, "It Is Well with My Soul," *Songs of Faith and Praise*, comp. and ed. Alton H. Howard (West Monroe, La.: Howard Publishing Co., 1994). [22]Henry Blunt, *Lectures on the History of Elisha* (Philadelphia: Herman Hooker, 1839), 81. [23]Ibid., 79.